பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 22 சனிக்கிழமை (04-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 129

# ஈழத் தமிழ் மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் கதவடைப்பு!

## சட்டசபையில் அறிவிப்பு

சென்னை, ஏப்ரல் 4

தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் ஈழத் தமிழ் மாணவர்களுக்கு இனி இடமளிப்பது இல்லை என்று மாநில அரசு முடிவு செய்துள்ளது.

தமிழக சட்டசபையில் மாநிலக் கல்வி அமைச்சர் எஸ். அரங்நாயகம் இதனை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

அரசின் முடிவைத் தொடர்ந்து தமிழகக் கல்லூரிகளில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் சேர்க்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது என்றும்—

அரசுக் கல்லூரிகளில் இது வரை இலங்கைத் தமிழ் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களும் தமிழக மாணவர்களுக்கே இனி வழங்கப்படும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளுடன் விமானம் வாரம் 2 முறை வவுனியாவுக்கு

கொழும்பு, ஏப். 4

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை விமான மூலம் வவுனியாவுக்கு அழைத்து வரத் திட்டமிடப்பட்டிருப்பதாக இலங்கையின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளர் திஸ்ஸ இல்வா தெரிவித்தார்.

அகதிகளை ஏற்றி வரும் விமானம் வாரம் இரு முறை விமானப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் என்றும் அவர் சொன்னார்.

அகதிகளை ஏற்றி வரப் பயன்படுத்தப்பட்டு வந்த 'எம். வி. அக்பர்' கப்பல் பழுதடைந்து விட்டதாலேயே இந்த ஏற்பாடு என்றும் அவர் கூறினார். (உ-எ)

## செட்டிகுளத்தை நோக்கி ராணுவம் முன்னேற முயற்சி

கொழும்பு, ஏப். 4

வவுனியா மாவட்டத்தில் இரண்டாயிரம் படையினர் இராணுவ நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினருக்கு உதவியாக கவசபடை அணி ஒன்றும் போர் விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின.

வவுனியா நகரில் இருந்து 25 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செட்டிக்குளம் பகுதியை நோக்கி படையினர் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

## புலிகளைத் தடை செய்வதன் மூலம் பேச்சுக்கு தடை விதிக்கக் கூடாது!

### செல்லச்சாமி ஆலோசனை

சென்னை, ஏப். 4

விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்று இந்தியாவில் எழுந்துள்ள கோரிக்கையும் அதற்கு சார்பான நடவடிக்கைகளும் இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவுள்ள உத்தேச பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருக்கக் கூடாது.

இவ்வாறு துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார் என்று தமிழகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. [உ-எ]

## ஜி. சி. ஈ. பரீட்சை முடிவுகள் விமானத்தில் வந்து சேரும்?

யாழ்ப்பாணம், ஏப். 4

1991 ஆம் ஆண்டு டிசம்பர் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகளை விமானம் மூலம் இங்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பரீட்சை முடிவுகள் நேற்று கொழும்பில் வெளியாகின.

யாழ். மாவட்டத்துக்கான முடிவுகள், செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன், விமானம் மூலம் இங்கு எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

[ஓ-8]

### முச்சந்தி முரளி



கலைச்செல்வி... அகதிகளை கலைக்கிற செல்வியாய் எல்லோ இருக்கிறா......!

## மணலாறில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 4

மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி இராணுவ முகாம்களில் இருந்து கடந்த திங்கட்கிழமை முதல் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாயாறு, செம்மலை, அலம்பில் பகுதிகளிலேயே ஷெல்கள் விழுந்து வெடிக்கின்றன.

இதேசமயம், கடந்த திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் காட்டுப் பகுதியில் விமானக் குண்டு வீச்சுக்களும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## அம்பாறையில் 30 தமிழர் கைது!

யாழ்ப்பாணம், ஏப் 4

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆறு நாட்களாக படையினர் மேற்கொண்டு வரும் தேடுதலின் போது 30 தமிழர் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து தமிழ் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த தேடுதல்களின் போது தமிழர்களின் உடைமைகளும் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. [உ-8]

## சனி, ஞாயிறு கிழமைகளில் கடைகள் திறக்கப்படும்

இன்றும் நாளையும் மற்றும் அடுத்து வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் (11, 12 ஆம் திகதிகளிலும்) யாழ். வர்த்தக நிலையங்கள் வியாபாரத்திற்காக திறந்திருக்கும்.

புத்தாண்டுப் பண்டிகையை ஒட்டி பொதுமக்களின் வசதிக்காக இந்த நடவடிக்கை என யாழ்ப்பாண வர்த்தகர்கள் சங்கம் அறிவித்திருக்கிறது

## ஏறாவூர் பாடசாலையினுள் படையினர் புகுந்து சூடு!

### மாணவன் மரணம்; பலர் காயம்

கடந்த சனியன்று ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தினுள் ஸ்ரீலங்காப் படையினர் புகுந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றும்—

அதனால் ஆறாம் வகுப்பில் கல்வி பயிலும் செல்லத்துரை விக்கினேஸ்வரன் என்ற மாணவன் உயிரிழந்தான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பல மாணவர்களும், ஆசிரியர்களும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மட்டக்களப்புப் பகுதியில் மாணவர்கள் பேரணி

யாழ்ப்பாணம், ஏப். 4

ஏறாவூர் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்து மட்டக்களப்புப் பாடசாலை மாணவ, மாணவிகள் அண்மையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

சுமார் 2 ஆயிரத்து 500 மாணவர்கள் பங்கு பற்றிய இந்தப் பேரணியில் அரசுக்கு எதிரான கோசங்கள் எழுப்பப்பட்டன.

பழுகாமம் கண்டமணி மகா வித்தியாலயம், விபுலானந்தர் மகாவித்தியாலயம், அம்பலாந்துறை கலைமகள் வித்தியாலயம். களுவதன்வெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, திக்கொடுறை கணேசா வித்தியாலயம், 38 ஆம் கிராம பாடசாலை, தும்பன் கோரி பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தனர்.

பேரணி முடிவில் பாதுகாப்பு அமைச்சு, செஞ்சிலுவைச் சங்கம், ஐ. நா. பாதுகாப்புச் சபை, மனித உரிமைகள் குழு ஆகியவற்றுக்கும் ஜனாதிபதிக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுக்கு உதவவில்லை; இஸ்ரேல் தரப்பு அறிவிப்பு

விடுதலைப்புலிகளுக்கு இஸ்ரவேல் உதவி செய்து வருவதாக வெளியான பத்திரிகைச் செய்திகளை ஆதாரமற்றவை என்று இஸ்ரரேல் அரசு மறுத்துள்ளது.

புதுடில்லிக்கு விஜயம் செய்த இஸ்ரரேலிய வெளியுறவு அமைச்சின் துணை இயக்குநர் ஜெனரல் மோஷே யகா செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்ரரேலிய மொஸாட் உளவுப்படை விடுதலைப்புலிகளுக்கு உதவுவதாகக் கூறப்படும் செய்திகளில் உண்மை கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

## கப்பல் மூலம் பணம் கொண்டுவர முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீர்குலைந்துள்ள பணப்புழக்கத்தை சரிப்படுத்துவதற்கான முயற்சிகளில் வங்கி வங்கி வட்டாரங்கள் ஈடுபட்டுள்ளன.

எவ்வாறேனும் புதுவருட காலம் வருவதற்கு முன்னர் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பணத்தைப் பெறுவதற்குத் தாம் முயன்று வருவதாக வங்கி உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே கொழும்பு தலைமை அலுவலக அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாக விளக்கியுள்ளதாகவும் —

இன்று மீண்டும் தொடர்பு

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தனி ஈழத்தை அங்கீகரிக்கக் கோரி உண்ணாவிரதமிருந்தவர் கைது!

### கோயம்புத்தூரில் சம்பவம்

சென்னை, ஏப். 4

தனி ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று கோரி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சி அலுவலகம் முன்பு சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த தமிழக இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கோயம்புத்தூர், இராமநாதபுரத்தைச் சேர்ந்த இந்த இளைஞரின் பெயர் பாலசுப்பிரமணியம். வயது 35.

மார்க்ஸிஸ — லெனினிஸ இயக்கத்தைச் சேர்ந்த இவர்—

''தனி ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும்; தனி திராவிட நாடு வேண்டும்; தடா சட்டம் அமுல் செய்யப்படுவதை தமிழக அரசு கைவிட வேண்டும்''—என்ற கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதத்தை தொடங்கினார்.

உண்ணாவிரதம் ஆரம்பமான சிறிது நேரத்தில், அனுமதியின்றி உண்ணாவிரதம் இருந்ததாகக் கூறி அவரைக் கோவைப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வரும் வழியில் அகதிக் குழந்தை மரணம்

கொழும்பு, ஏப். 4

தமிழகத்தில் இருந்து வந்த அகதிக் குழந்தை ஒன்று திருகோணமலை வரும் வழியில் கப்பலிலேயே மரணம் அடைந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை 397 அகதிக் குடும்பங்களுடன் வந்த ''எம். வி. அக்பர்'' கப்பலிலேயே இச் சம்பவம் நடந்தது.

இக் கப்பலில் வந்த சுதர்சன் என்ற இரண்டரை வயதுக் குழந்தையே மரணம் அடைந்த குழந்தை ஆகும்.

இக் குழந்தையின் தாயார் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்றும், குழந்தையின் உடலை திருகோணமலையிலேயே அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலின் நான்கு இயந்திரங்களில் மூன்று இயந்திரங்கள் பழுதடைந்து விட்டன என்றும் இதன் காரணமாக கப்பல் 24 மணி நேரம் தாமதித்தே திருகோணமலைத் துறைமுகத்தை வந்து அடைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது

இதேசமயம்—

கடந்த வாரம் இலங்கை திரும்பிக் கொண்டிருந்த தமிழ் அகதிப் பெண் ஒருவர் நடுக்கடலில், கப்பலில் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

இதன் காரணமாக ஆயிரத்து நான்கு அகதிகளுடன் சென்னையில் இருந்து புறப்பட்ட ''எம். வி. அக்பர்'' கப்பலில், திருகோணமலைத் துறைமுகத்தை அது வந்தடைந்த போது ஆயிரத்து ஐந்து அகதிகள் இருந்தனர்.

பெண் குழந்தையின் பிறப்பு திருகோணமலையில் பதிவு செய்யப்பட்டது. கப்பலில் அகதிகளுடன் கூட வந்த டாக்டரும் தாதியும் பிரசவத்தைக் கவனித்தனர்.

# நாளை

யாழ்ப்பாணம், ஏப் 4

அரியாலை சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் ''குழந்தைகள் தினம்'' நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான புத்தூர் பிரதேச மட்ட பரிசளிப்பு விழா, நாளை மாலை 6 மணிக்கு ஆவரங்கால் சிவன் கோயிலில் நடைபெறவுள்ளது. (ஓ)

★ ★ ★

பாலர் கல்விக் கழகத்தின் வெள்ளிவிழா மலர் வெளியீட்டு வைபவம், நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 4

இடம்பெயர்ந்த தீவக மக்களின் நலன் காக்கும் கழகத்தின் தலைமைச் செயலகத் திறப்பு விழாவும், கலந்துரையாடலும் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளன. [ஓ]

# கல்விக் கொலைக்கெதிராக ஒன்றுபட்டு நிற்போம்

## ஆசிரியர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 4

கல்வி, தமிழீழத்தின் கருவிலே வளர்ந்த சொத்து. குண்டு வீச்சு, ஷெல்லடி, கண்மூடித்தனமான தாக்குதல்கள், கடுமையான பொருளாதார அழுத்தங்கள் இவற்றுக்கு மத்தியிலும் உயர்ந்து நிற்பது கல்வியின் சிறப்பு.

ஆகவே தமிழர்களின் உயிர் நாடியான கல்வியை, உருக்குலைத்துவிடும் நோக்கோடு இனவாத சிங்கள அரசு உருவாக்கி அரங்கேற்றும் அழுத்தங்களை இனங்கண்டு கொடுமைகளைக் கிள்ளி எறிய வெள்ளம்போல் திரண்டெழுவோம்.

''இனவாத அரசின் கல்விக் கொலையை இனம் காணுவோம்'' என்ற தலைப்பில் தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் சில முக்கிய அம்சங்கள் வருமாறு;

★ ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அசிரத்தை காட்டி வருகிறது.

★ சிங்களப் பகுதிகளில் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் பணி சிறப்பாக முடிந்துள்ளது. ஆனால் தமிழ்ப் பகுதித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதில் அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறது.

★ பரீட்சைகள் பின் போடப்படுவதால் கல்வி ஆண்டு நீடிக்கப்பட்டு மாணவரின் மன உணர்வுகள் மந்தமடைகின்றன.

★ இலவச பாடநூல்கள் உரிய காலத்தில் அனுப்பப்படுவதில்லை.

★ குண்டு வீச்சினால் பல பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. உரிய வகுப்பறைகள் இன்றி மாணவர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

★ மாணவர் சீருடைக்கான துணிகளைக் கொண்டு வருவதற்கு தடை விதிக்கப்படுகிறது.

★ அரசியல் அழுத்தத்தால் தரப்படுத்தப்பட்ட தமிழர் கல்வி, இராணுவ அழுத்தத்தால் அனாதையாக்கப்பட்டது. தற்போது பொருளாதார அழுத்தத்தால் தமிழர் கல்வியின் மூளை வலு ஊட்டச்சத்தின்றி மந்தப்படுகிறது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கப்பல்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதே வேளை, ஒய்வூதியம் வழங்குவதற்குத் தேவையான பணத்தில் ஒரு பகுதியினை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நேற்று இலங்கை வங்கிக்கு வழங்கியது. (அ-3)


## கலை, வர்த்தகக் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான

### கலந்துரையாடல்

காலம்:- 12-04-92—06-05-92 வரை

நேரம்: காலை 8-00 மணி

★ பொருளியல் ★ வணிக முகாமைத்துவம்
★ கணக்கியல் ★ தமிழ்
★ இந்து நாகரிகம் ★ அரசியல்

● முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.
● நேர அட்டவணை காரியாலய ஊழியர்களைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும்.

[சி/1802] — நிர்வாகி.



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ். கிளை, தலைமையலுவலகம்

பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

[அ] கிளை திட்டமிடல் அதிகாரி — முதலுதவி
[ஆ] கிளை திட்டமிடல் அதிகாரி — அனர்த்தங்களுக்கு ஆயத்தப்படுத்துதல்
[இ] கிளை திட்டமிடல் அதிகாரி — கிளை அபிவிருத்தி
[ஈ] கிளை திட்டமிடல் அதிகாரி — இளைஞர் சேவை

மேற் கூறிய பதவிகளுக்கு தகுந்த கல்வித் தகைமையும், அனுபவமும், ஆற்றலும், மாவட்ட மட்டத்தில் சேவை செய்யும் ஆர்வமும் உள்ளோர் விரும்பப்படுவர். இதனுடன் தட்டெழுத்து அனுபவம் மேலதிக தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் 15 - 04 - 1992 க்கு முன்பாக தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். 20 - 04 - 1992 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
02 - 04 - 1992

[சி-1762]



## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

## ★ செல்வன் நிரோஜன் ★

நீர்வேலி மத்தியில் வசிக்கும் குணநாதன் — பங்கஜவல்லி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிரோஜன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (04-04-1992) தமது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உற்றார், உறவினர், அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென உளமார வாழ்த்துகின்றனர்.

நீர்வேலி மத்தி
நீர்வேலி.

[20350]



## SHAMROCK

கல்வி நிறுவனம்,
யாழ் சுண்டிக்குளி.

### A/L 92

PURE/APP.

திரு. P. கமலசிங்கம்
B. Sc. (Hons.) Dip-in-Ed.

ஆரம்பம்:
1. சிக்கல் எண்கள்
2. நீர் நிலையியல்

PHYSICS

திரு. ஜெயபாலன்
B.Sc. (Hons)

புலங்கள்

ஆரம்பம்:
04—04—1992 சனி
பிற்பகல் 4-00

[20348]



## புலமைப் பரிசில்

ஆண்டு-5 [1991]

பயிற்சிப் பரீட்சை

05-04-1992
ஞாயிறு
பிற்பகல் 1 00 மணிக்கு
இக் கல்வி நிறுவனங்களில் நடாத்தப்படும்.

Bond — யாழ்ப்பாணம்
Express — இருபாலை
Selin — கோப்பாய்
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
Vinyls — சுன்னாகம்
Vinayahar — ஆனைக்கோட்டை
Bitsmans — மானிப்பாய்
Paarathy — சித்தங்கேணி
National — பண்டத்தரிப்பு

விபரங்களுக்கு:

BOND
யாழ்ப்பாணம்.

[சி-1824]



## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

### மலிவு விற்பனை

சித்திரை புதுவருட தினத்தை முன்னிட்டு சங்கத்தின் புடவைக்கிளைகளில் உள்ள புடவை வகைகள் விலை குறைக்கப்பட்டுள்ளன. உங்கள் புடவைத் தேவைக்கு முந்துங்கள்.

த. பேரம்பலம்
பொதுமுகாமையாளர்.

(சி/1769)



## Walk - in Interview
## COMPUTER PROGRAMMER

We are in the process of computerising our Accounts and are looking for a competent Programmer.

If you possess the knowledge to work on D Base III+, Lotus 123 & Wordstar 2000+and feel you are the right candidate, please call over on Tuesday the 7th of April, 1992, between 9 a.m. and 12 Noon with all relevant certificates.

Previous experience will be an added advantage.

NEW UTHAYAN PUBLICATIONS (Pvt.) LTD.,
292/2, NAVALAR ROAD,
JAFFNA.

(C-1816)



## Computer Programming in BASIC Language

4 மாதங்கள்

திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: 06—04—1992 10-30 மணி

Lectures by: S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
[Pioneers in Computer Education]
16, 3rd Cross Street Jaffna.

[சி-1826]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டவர்கள் வெளியேறினால் ஜேர்மன் பொருளாதாரம் சீர்குலையும்

## நிபுணர்கள் எச்சரிக்கை

பேர்லின், ஏப். 4

ஜேர்மனியில் தொழில் புரியும் இலங்கையர் உட்பட ஏனைய வெளிநாட்டவர் அந்த நாட்டில் இருந்து வெளியேறினால் அங்கு பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் பொருளாதார நிபுணர்கள் நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து இது தெரிய வந்திருப்பதாக ஹம்பர்க்கில் இருந்து வெளிவரும் 'டைசிற்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டவர் வெளியேறுவதன் மூலம் ஜேர்மனியின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அர்த்தம் வெளிநாட்டவரை வரவேற்க ஜேர்மன் தயாராக உள்ளது என்பதல்ல என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் உலக நாடுகளில் இருந்து மக்கள் பொருளாதார காரணங்களுக்காக ஜேர்மனிக்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் தொடரும் என்றும் ஜேர்மன் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

[ஒ-எ]

## குடும்ப அட்டை பதிவு

யாழ்ப்பாணம், ஏப். 4

குடும்ப அட்டைகளை பதியாதவர்கள் நாளை 5 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது கிராம சேவையாளரிடம் அவற்றைப் பதிய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள சகல கிராம சேவையாளர்களும் தாம் பதிவு செய்த குடும்ப அட்டைகளை உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(அ)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 02 — 1967

மறைவு: 17 — 03 — 1991

### அப்பாத்துரை ரவிச்சந்தர்
(கடாபி)

இந்நாட்டை விட்டு பொன்னாடு சென்றும்
எங்கள் இதயத்தில் வாழுகின்ற இனியவனே!
ஆண்டொன்று சென்றென்ன, அகிலத்தில் நாங்கள்
உள்ளமட்டும் உன்னை மறப்போமோ!
பண்பான உன்குணத்தால் பார்போற்ற வாழ்ந்தாயே!
இப்புவியும் இருநிலமும் உனக்கு ஈடாமோ!
மீண்டுவிடா துயர்தீர்க்க மீண்டும் ஒருஜென்மம்
எடுத்துவந்தேனும் பின்னரும் நாமிங்கு
பிரியாமல் வாழ்வோமா? காலம் போனாலும்
காத்திருப்போம் உன்நினைவில்.

உன் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டி-
உன் பிரிவுத்துயரால் வாடி நிற்கும்,

தாய், தங்கை, தம்பி,
மைத்துனன், மருமகன், உறவினர்கள்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால்.

(20330)

## செல்வா நினைவு ஆராதனை

யாழ்ப்பாணம், ஏப். 4

தந்தை செல்வாவின் 95 ஆவது ஜனன தினத்தையொட்டி அவரது வாழ்வுக்கு நன்றி தெரிவிக்கும் திருவிருந்து ஆராதனை கடந்த செவ்வாயன்று சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆராதனையை வண. கிறிஸ்டி றொபேர்ட் நடத்தினார்.

வண. ஆ. தேவானந், வண. ஜெபநேசன், மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் பிரதம சேவகர் சாம். அல்பிரட் அடிகளார், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. ஐஷாக் செல்வரத்தினம், வண. நேசகுமார், யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் டாக்டர் ஜெயகுலராஜா ஆகியோர் இந்த ஆராதனையைப் பங்கேற்றி நடத்தினர்.

[இ]

## யாழ்ப்பாண புதிய உ. அ. அதிபர்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபராக திரு. கே. குணராசா (செங்கை ஆழியான்) நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கச்சேரியில், மேலதிக அரசாங்க அதிபராக இவர் இதுவரை காலமும் பணிபுரிந்தார்.

அதே சமயம், யாழ் உதவி அரசாங்க அதிபராக இதுவரை காலம் பணியாற்றிய திரு. ஹெக்டர் யோசேப் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

(ஒ-3-100)

## எழுதுவினைஞர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 4

எழுதுவினைஞர் தரத்தில் உள்ளவர்களை அதி விசேட தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

[ஒ-3]

## இராணுவ நடவடிக்கை அஸாமில் மீண்டும் ஆரம்பம்

புதுடில்லி, ஏப். 4

தனிநாடு கோரும் போராட்டத்தை மீண்டும் நடத்தப்போவதாக அறிவித்திருக்கும் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியின் (உல்பா) தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை இந்திய அரசு ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தொடக்கம் அஸாம் மாநிலத்தில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரி நடுப்பகுதியில் இருந்து மத்திய அரசுக்கும், அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் இடையே நடந்து வந்த பேச்சுக்கள் முறிவடைந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-எ)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### சரவணமுத்து நாகலிங்கம்பிள்ளை
(சாமியார்)

வழிகாட்ட வந்தது: 12 — 07 — 1915

ஒளிநோக்கி விரைந்தது: 21 — 02 — 1992

நாற்பத்தைந்து நாட்கள்
நகர்ந்து தான் சென்றாலும்
ஆறுமோ எங்கள் மனம்
அடையுமோ ஆறுதல் - தான்
தீருமோ எங்கள் கவலை
திடமுடன் நாம் வாழ்வதில்லை
தீவினை அடையும் நோக்கில்
நாடியே அரக்கர் கூட்டம்
நகர்ந்துமே சென்றதனால்
வெள்ளியன்று வா மகளே - என்று
விரைந்து என் தந்தை கூற
ஓடிப் போய்ப் பார்ப்பேன் - என்று
உள்ளத்தில் அமைதி கொண்டு
விடிந்ததும் சென்றபோது
வங்களாவடியைத் தாண்டி - செல்ல
வழியில்லாது அரக்கர் கூட்டம்
குவிந்ததால் திரும்பி விட்டேன்
கோதை நான் பாவியானேன்
கண்ணிலே தந்தை உருவம் - என்
காதிலே அவரின் உரைகள் - என்
நெஞ்சிலே நிழல் படங்கள் - என்
நினைவிலே நிதமும் கவலை - நான்
பாரினில் இருக்கு மட்டும்
பகைவனாம் இராணுவத்தால்
பட்ட துன்பம் மாறுமோ -
மறையுமோ தான்
தந்தையை இழந்து - நான்
தனிமையில் வாடுகின்றேன்
இன வெறிக் குண்டர் - அந்த
இலங்கை இராணுவத்தால்
நடந்ததை நினைத்து
பலன் இல்லை ஆயினும் - மனம்
தேறியே நிற்க - என்
நிலை திடுமாறுதம்மா!

நன்றி

என். தடாதகைப்பிராட்டி,
அரசினர் வைத்தியசாலை,
புங்குடுதீவு.

[20349]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 — 9 — 1940

உதிர்வு: 5 — 3 — 1992

### அமரர் நமசிவாயம் குணசிங்கம்

உம் அன்பான புன்சிரிப்பாலும், பண்பான பேச்சாலும், பணிவான நடத்தையாலும், எம் இதயம் கலந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றீர்! காலமெலாம் எங்களுக்கு வழி காட்டியாக இருப்பீர் என இருந்தோம் காலன் உம்மை பாதி வயதில் பறித்தானே! நீர் சென்றாலும் நீர் விட்டுச் சென்ற பாசம் எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது.

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உறவினர், நண்பர்கள்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

[29335]

A/L 92
Paper Class
சனி — ஞாயிறு
7-00 — PURE / APP
திரு. தவரட்ணசிங்கம்
10-00 — BOTANY
திரு. சதீஷ்
11-00 — ZOOLOGY
திரு. செங்காதரன்
12-00 — PHYSICS
திரு. விமல்ராஜ்
1-00 — CHEMISTRY
திரு. சிவசோதி
ஆரம்பம்:
05 — 04 — 1992
BOND INSTITUTE
யாழ்ப்பாணம்.
[சி-1822]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 04

# சின்னஞ்சிறு விளம்பரம்

### 92 A/Lவினாத்தாள்

தற்போது நடைபெறுகின்ற G.C.E A/L - 92 விசேட பரீட்சைக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களின் வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[சி-1815]

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, வயது 26, 8 இல் செவ்வாய், நட்சத்திரம், மகம் டென்மார்க்கில் வேலை செய்பவர், விசா உண்டு இவருக்கு நல்ல குணமுடைய, அழகான பெண் உயரம் 5' 5'' உடைய பெண் தேவை. 2 இல் செவ்வாய், 8 இல் செவ்வாய் விரும்பத்தக்கது. 397, C/o உதயன், யாழ்ப்பாணம்.

(20320)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 (1991) புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை இன்று 4-4-92 சனி மு.ப 7-00 மணிக்கும் மு.ப 11-00 மணிக்கும் நடைபெறும். இம் மாதிரிப் பரீட்சை மீண்டும் 11.4.92, 18-4-92, 25-4-92 ஆகிய திகதிகளில் மேற்குறித்த நேரங்களில் நடைபெறும். பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(20347)

### இலவச திருமண சேவை

வயது 30, மிருகசீரிடம், செவ்வாய் 4, U-K இல் வேலை செய்யும் பெண்ணுக்கு தகுந்த மணமகன் U-K இல் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4593]

36 வயது, பூராடம், உள்நாட்டில். கமம், வியாபாரம் செய்பவருக்கும், 34 வயது, புனர்பூசம், Denmark இல் தொழில் புரிபவருக்கும் மணப்பெண்கள் தேவை. உள்நாடு, வெளிநாடு விண்ணப்பங்கள் ஏற்கப்படும். திருமணம் இலங்கையில். து விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

(4607)

39 வயது, கேட்டை 2, கனடாவில் தொழில் புரிபவருக்கு மணமகள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். விண்ணப்பங்கள் ஞாயிறு காலையில் ஏற்கப்படும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(4610)

**Personal New Science Centre,**
Elilakam Front Lane, Jaffna.

**92 A/L**
*Revision and Paper*

Che.- திரு. செல்வா 8 - 30 a. m.
Phy:- திரு. ரவீந்திரநாதன் 7 - 30 a. m.
Zoo:- திரு. ஈஸ்வரத்ராசன் 9 - 30 a. m.
Bot:- திரு. பாலசுப்பிரமணியம் 10 - 30 a. m.
Pure:- / App:- திரு. குணசிங்கம்

ஆரம்பம்:
**05-04-1992**
ஞாயிறு 7 - 30 a. m.

(சி/1810)

### தேவை

நல்ல நிலையிலுள்ள 100 இரும்புக் கதிரைகள் விலைக்குத் தேவை. நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். திருமதி எம். சுப்பிரமணியம், 15/2, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-1765)

A/L விஞ்ஞானம் படித்த Typing (ஆங்கிலம் / தமிழ்) தெரிந்த உதவியாளர்கள் தேவை. நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும். பரீட்சைப் பகுதி, Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-1821]

### பரீட்சை

இம் மாதம் நடைபெற இருக்கும் ஆண்டு - 5க் கான, புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 5-4-92 ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். எலைற் இன்ஸ்ரிரியூட். 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [4613]

### அம்பாள் திருமண சேவை

Engineer, Doctors, Lecturers, I. C. M. A-, B.Sc., B. A., A/L Teachers ஆகிய மணப் பெண்களுக்கு மணமக்கள் தேவை. விண்ணப்பம் ரூபா 50/-. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில், நல்லூர், யாழ்ப்பாணம். (20341)

## மிக முக்கிய கலந்துரையாடல்

பின்வரும் இடங்களில் அவற்றுக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

சகல உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| யா/முத்துக்குமாரசாமி-மகாவித்தியாலயம், கைதடி | 05-04-1992 காலை 9-30 (ஞாயிறு) | தென்மராட்சி மேற்கு பிரிவுக்கு |
| யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி | 05-04-1992 காலை11-30 (ஞாயிறு) | தென்மராட்சி - மத்தி |

வி. ஆணையாளர் / பி. செயலர், தென்மராட்சி.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்,
02-04-1992.

[சி-1766]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**சோமசுந்தரம் மயில்வாகனம்**

[இளைப்பாறிய வனபரிபாலன அதிகாரி (A. C. F.)]

மலர்வு: **25 - 06 - 1916** உதிர்வு: **06 - 03 - 1992**

எங்கள் குடும்பத் தலைவரான அமரர் சோமசுந்தரம் மயில்வாகனம் அவர்களது சபிண்டிக் கிரியைகள் நாளை 05-04-1992 ஞாயிறு முற்பகல் 10 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

குறித்த கிரியைகளில் பங்குகொண்டு ஆன்ம சாந்தியின் பொருட்டுப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கிறோம்.

திருமதி [illegible] (மனைவி), குடும்பத்தினரும்.

அம்மன் வீதி,
உரும்பராய்.

(20345)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 02 — 1928



மறைவு: 04 — 04 — 1990

**மனுவல் ஞானப்பிரகாசம்**
(நடராசா)

அன்பின் உறைவிடமே! பாசத்தின் பிறப்பிடமே!
ஒரு நொடிப்பொழுதில் மறைந்திட்டாய்!
எம் ஆசை எண்ணங்களை தகர்த்திட்டாய்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று [4-4-1992] காலை 5-45 மணிக்கு குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
நண்பர்கள்.

இல. 13, 3ஆம் குறுக்குத்தெரு,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

N. ராஜன் (மகன்)

[20327]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கட்டைக் காட்டில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**லெப். வேந்தன் (வின்சன்)**

**அமிர்தநாதர் அலஸ்ரீன்**
(திருகோணமலை)

வீரஜனனம்: **01 — 05 — 1970** வீரமரணம்: **05 — 03 — 1992**

வேங்கையென வீறு கொண்டெழுந்தாயடா - வேந்தா!
வெஞ்சமர் புரிந்து பல புல்லர்களை
மண்ணில் சாய்த்தாயடா வேந்தா!
வீறு கொண்டே பல பல ஆயுதங்களை
அள்ளினாயடா வின்சா!
விடுதலை வெகு தூரத்தில் இல்லை என்ற
நிலையில் நீ மாவீரனானாயடா வின்சா!

அன்பின் இதயங்களால் நின் மலர் பாதம்
அஞ்சலி செய்கின்றோம்.

நின் பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, அத்தான், அக்கா,
அண்ணன்மார், தம்பி, மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

செம்பியன்பற்று வடக்கு,
தாளையடி.

[20228]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## புதிய வழியில் சிந்திப்பாரா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் எட்டு எதிர்க்கட்சிகள் நடத்திய 180 மைல் பாதயாத்திரை வியாழக்கிழமை கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பூர்த்தியானது.

அரசாங்கத்தின் அநீதிகளை, அதன் குறைபாடுகளை மக்களுக்குப் பிரசித்தப்படுத்தி அதற்குள்ள ஆதரவைக் குறைப்பதே — அதனை வீழ்த்துவதே — இந்தப் பாதயாத்திரையின் பிரதான நோக்கம். அதன் பொருட்டு அரசுக்கு எதிராக மக்களை அணிதிரளச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கை இதுவாகும்.

கடந்த வருடம் மே மாதத்தில் தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளின் தேர்தலில் ஆளுங் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியது. அதனை ஓர் அளவுகோலாக்கி தமக்குள்ள ஆதரவு நீடித்து வருவதாக, பெருகியுள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா கணக்குப் போட்டு வைத்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் உட்பூசல்கள் காரணமாகவும், எதிர்க்கட்சிகள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மை காரணமாகவும் தமது கட்சிக்கு — தமக்கு — உள்ள ஆதரவை நிலையாக்க முடியும் என்பதும் ஜனாதிபதியின் உள்ளெண்ணமாக உள்ளது.

தமது கட்சியிலிருந்து பிரிந்த லலித் - காமினி கோஷ்டியினருக்கு ஆதரவு பெருகாமல் தடுத்து விட்டதாலும் ஜனாதிபதி தமது கட்சிக்குள்ள ஆதரவு குறித்து அதீத நம்பிக்கை வைத்திருக்கிறார். அதன் காரணமாக திடீர் தேர்தல் ஒன்றை அவர் நடத்தக்கூடும் என்று கொழும்பில் அவதானிகள் மதிப்பிட்டனர்.

ஆனால், தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாமல் யுத்தம் தொடர்வதும், அதனால் ஏராளமான சிங்கள இளைஞர்கள் சிப்பாய்களாக மடிவதும்—

நாட்டின் வருமானத்தில் பெரும்பகுதி பாதுகாப்புச் செலவுகளுக்காக ஒதுக்கப்படுவதால் பொருளாதாரம் கீழிறங்கி, மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து, அவர்கள் வறுமையில் வாடுவதும்—

ஜனாதிபதி பிரேமதாசாவைத் திடீர்த் தேர்தல் குறித்து பயம் கொள்ளச் செய்யும் காரணிகளாக உள்ளன.

இவற்றுக்கும் மேலதிகமாக, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திரு. பிரேமதாசா இராணுவத் தீர்வை நாடியதால் இராணுவம் மேலோங்கி நிற்கிறது. இப்போது அதனை எட்டவும் விலக்கி வைக்க முடியாது; கிட்டவும் நெருக்கமாக்க இயலாது என்ற இரண்டுங் கெட்டான் நிலையில் உள்ளார்.

எவ்வாறேனும் பாதயாத்திரை பெருவெற்றி என்றும் அதன் மூலம் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு பெருகியுள்ளதாகவும், அவதானிகள் மதிப்பிடுகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில்—

ஜனாதிபதி பிரேமதாசா தமது கட்சிக்குள்ள ஆதரவைப் பெருக்க வேண்டுமானால் துணிச்சலுடன் தமிழர் பிரச்சினையை நீதி வழி நின்று தீர்ப்பதே நல்ல மார்க்கம். நாட்டில் அதன் மூலம் அமைதி பிறக்கும். பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். மக்கள் வறுமையைப் போக்கலாம். சிங்கள, தமிழ் மக்கள் இரு சாராரின் ஆதரவும் தானாகவே கிடைக்கும். இராணுவத்தின் தயவில் தங்க வேண்டிய நிலை நீங்கும்.

பாதயாத்திரையைப் பாடமாகக் கொண்டு, எச்சரிக்கையாக எடுத்து திரு. பிரேமதாசா புதிய வழியில் சிந்தித்து உரிய அணுகு முறையைக் கைக்கொள்வாரா?

## ஜி. சீ. ஈ. பரீட்சை பெறுபேறுகள்

கொழும்பு, ஏப். 4

கடந்த டிசம்பரில் இடம்பெற்ற ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான பெறுபேறுகள் இன்று சனிக்கிழமை கொழும்பையும் அதன் சுற்றுப்புறங்களையும் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்குக் கிடைக்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

வெளியூர்ப் பரீட்சார்த்திகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமையே இப் பெறுபேறுகள் கிடைக்கும்.

கொழும்பில் தற்போதுள்ள மின்சார வெட்டு காரணமாகவே பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல கூறினார். [ஒ-எ]

# ராஜீவ் கொலை சம்பவத்தில்

# முக்கிய பிரமுகர்களும் சம்பந்தம்!

## சட்டசபையில் ஜெயலலிதா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 4

ராஜீவ் காந்தி கொலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் சிலரும் அரசியல் தலைவர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர். இதனை மூடி மறைப்பதற்கு உயர்மட்டத்தில் உள்ள சிலர் முயலுகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு தமிழக சட்டசபையில் குற்றஞ்சாட்டினார்.

இந்த விடயம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவானின் கவனத்துக்கு தாம் கொண்டுவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழ் நாட்டுக்கு ராஜீவ் காந்தி விஜயம் செய்தால் அவர் உயிருடன் தமிழ்நாட்டிலிருந்து திரும்பமாட்டார் என்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பயமுறுத்திய சிலரை, ராஜீவ் காந்தி படுகொலை பற்றி விசாரித்து வரும் மத்திய புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்கவில்லை என்றும்—

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தென்னிந்தியாவில் உள்ள இடதுசாரி இயக்கமான தீவிரவாத இளைஞர் முன்னணியையும் தடைசெய்யுமாறு தாம் மத்திய அரசைக் கோரியுள்ளதாகவும்— செல்வி ஜெயலலிதா மேலும் கூறினார். [இ]

## ஜே. வி. பி. தலைவரின் சடலம் 4 வருடங்களின் பின் மீட்பு!

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் புதைக்கப்பட்ட ஜே. வி. பி. தலைவர் என்று கூறப்படும் ஒருவரின் சடலம் புதை குழியில் இருந்து பொலீஸாரினால் தோண்டி எடுக்கப்பட்டது.

அங்கொட பகுதியில் ஹிம்புட்டான என்ற இடத்தில் உள்ள வீட்டு வளவினுள் அஜித் அல்லது முகமது என்பவரின் சடலம் புதைக்கப்பட்டிருந்தது.

1988 இல் பொரளைச் சிறைச்சாலையில் இருந்து அந்த நபர் தப்பி ஓடிய போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானார் என்றும் அவரின் உயிரைக் காப்பாற்ற அவரின் கூட்டாளிகள் அவரை ஹிம்புட்டானவுக்கு எடுத்துச் சென்றனர் என்றும்—

வைத்திய முயற்சி பலனளிக்காத நிலையில் அவர் உயிர் இழந்தார் என்றும்—

அதன் பின்னர் அவரது சடலம் அவர் தங்கியிருந்த வீட்டு வளவினுள் புதைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கொம்பனித் தெரு பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் கொடுத்த தகவலைத் தொடர்ந்து, சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. (ஒ-எ)

## ஜப்பான் மாணவர்கள் 243 நாட்கள் பாடசாலைக்கு!

### உலக நாடுகளில் சாதனை

டோக்கியோ, ஏப். 4

மாணவர் கல்விகற்க வேண்டிய கால எல்லையை ஜப்பான் அரசாங்கம் பதினொரு தினங்களால் குறைத்துள்ள போதிலும், ஓர் ஆண்டில் ஜப்பான் மாணவர்கள் 243 நாட்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

இதற்கு முன்னர் ஜப்பான் மாணவர்கள் 254 நாட்கள் பாடசாலைக்குச் சென்று வந்தனர்.

அமெரிக்க மாணவரிலும் பார்க்க ஜப்பான் மாணவர்கள் 63 நாட்கள் கூடுதலாக பாடசாலைக்குத் தற்போது செல்கின்றனர்.

அமெரிக்காவில் ஆண்டு ஒன்றுக்கு 180 தினங்களே மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

பாடசாலை நாட்களை தமது நாட்டிலும் அதிகரிக்க அமெரிக்கக் கல்வியாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஏனைய முக்கிய மேலை நாடுகளில் பாடசாலைகள் இயங்கும் நாட்களின் எண்ணிக்கை வருமாறு: ரஷ்யா-210, ஐக்கிய ஜேர்மனி- 210, பிரிட்டன்-192.

இலங்கையில் மாணவர்கள் எத்தனை நாட்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர் என்று கேட்கிறீர்களா?

ஆக 190 நாட்கள் மட்டுமே!

அதுவும் குண்டு வீச்சினாலும், ஷெல் வீச்சினாலும் கல்வி நாட்களை இழக்கும் தமிழ்ப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் கதி பற்றிச் சொல்லவும் வேண்டுமா? [ஒ-எ-3]

## வெளிநாட்டு தூதரகங்கள் மீது லிபியாவில் தாக்குதல்!

### வெனிஸுலா தூதரகம் தீக்கிரை!!

திரிப்பொலி, ஏப். 4

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் பொருளாதாரத் தடைவிதிக்கும் தீர்மானத்தைக் கண்டித்து லிபிய தலைநகர் திரிப்பொலியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளிநாட்டுத் தூதரகங்கள் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களினால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்ட வெனிஸுலா நாட்டுத் தூதரகம் பின்னர் தீக்கிரையாக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

வெனிஸுலா நாட்டுத் தூதரும் அவரது முதலாவது செயலாளரும் திரிப்பொலியில் உள்ள ஸ்பானிய நாட்டுத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தனர் என்று பி. பி. ஸி. அறிவித்தது.

இரண்டு மேற்கத்திய விமானங்களைக் குண்டு வைத்துத் தகர்த்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு லிபியர்களை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் ஒப்படைக்க லிபியா மறுத்து வருவதைத் தொடர்ந்து, அந்நாட்டின் மீது ஐ. நா. பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடைவிதிக்கும் முடிவை எடுத்துள்ளது தெரிந்ததே.

இம்முடிவை எடுத்த ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு, வெனிஸுலா நாட்டுத் தூதரே தலைமை வகித்தார்.

பாதுகாப்புச் சபையின் இம் மாதத்திய தலைவராக, சுழற்சி முறையில், வெனிஸுலா தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். [ஒ-எ]

## யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம்

## வாக்காளர் பட்டியல்கள் மீளாய்வு செய்யப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். மாவட்டத்திலுள்ள வாக்காளர் பட்டியல்களை மீளாய்வு செய்யும் வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன என்று யாழ். தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த பல வருடங்களாக யாழ். மாவட்டத்தில் மீளாய்வு இடம்பெறாததால், வாக்களிக்கத் தகுதி பெற்ற பல ஆயிரக் கணக்கானோர் வாக்குரிமை பெற முடியாதவர்களாக உள்ளனர்.

முன்னர் ஒவ்வொரு வருடமும் இந்த வேலைகள் கிரமமாக நடைபெற்று வந்தன.

அடுத்த மாதம் வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யும் வேலைகள் ஆரம்பமாகும் போது இடம் பெயர்ந்தவர்களின் வாக்காளர் அட்டைகள் புதுப்பிக்கப்படமாட்டா என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-3]

## இலங்கைக்கு ரூ.130 கோடி உதவி

கொழும்பு, ஏப். 4

நாட்டில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 130 கோடி ரூபாவை இலங்கை அரசுக்குக் கடனாக வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

கடற்றொழில் மற்றும் நீரியியல் துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா இத் தகவலை வெளியிட்டார்.

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் உள்ள மீன்பிடித்துறைமுகங்களும் இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

# இயல்பு வாழ்க்கை நம்பிக்கையை திருமலை மக்கள் இழந்துவிட்டனர்

## நகரசபைச் செயலாளர் அறிக்கை

திருகோணமலை, ஏப். 4

திருகோணமலை நகரில் தொடர்ந்து இடம் பெற்று வரும் இன வன்செயல்கள் அங்கு வாழும் மக்கள் மத்தியில் சகஜ வாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்தும் நம்பிக்கையைச் சிதறடித்துள்ளன.

திருகோணமலை நகரசபையின் செயலாளர் திரு. பெனடிக்ற் தார்சியஸ் 1992க்கான அபிவிருத்தித்திட்டம் பற்றிய தமது அறிக்கையில் முன் கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

திருகோணமலை நகரம் 1977, 1983, 1985, 1987, 1990 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து இனவன்செயல்களுக்கு இலக்காகியது. இத் தாக்குதல்களால் திரு[illegible] மலை நகரில் உடைமைகளுக்கும், உயிர்களுக்கும் பலத்த சேதமேற்பட்டன. அது மட்டுமல்ல, மீண்டும் தொழில்களை ஆரம்பித்து சகஜ வாழ்க்கை வாழலாம் என்ற திருகோணமலை நகர மக்களின் நம்பிக்கையையும் அவ் வன்செயல்கள் சிதறடித்து விட்டன.

உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் காரணமாக திருகோணமலை நகர சபைக்குக் கிடைக்க வேண்டிய ஆதன வரியில் 15 லட்சம் ரூபா வரையில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வீதிகள் புனரமைப்பு, வடிகால்வாய்கள் பராமரிப்பு, நீர் விநியோகம், மின் விநியோகம், தொலைத்தொடர்பு மற்றும் வர்த்தக நிலையங்களை [illegible] ஆகியனவற்றை அவசர பணிகளாக மேற்கொள்ள வேண்டிய நிலை நகரசபைக்கு ஏற்பட்டுள்ளது — என்றும் செயலாளர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். [அ-எ]

## போபர்ஸ் பீரங்கி பேர ஊழல்:

## விசாரணையை விரைவுபடுத்துமாறு ராவ் சுவீடனிடம் கோரிக்கை

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் பற்றிய விசாரணையை மிகவும் விரைவாக மேற்கொள்ளும்படி சுவீடிஷ் அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக சுவீடிஷ் அரசுக்குத் தெளிவாக மத்திய அரசு தகவல் அனுப்பியிருப்பதாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் லோகசபையில் அறிவித்தார்.

போபர்ஸ் விசாரணையைத் தாமதப்படுத்தும்படி முன்னாள் அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி விடுத்த கோரிக்கையை உதாசீனம் செய்யும்படியும், சுவீடிஷ் அரசுக்கு இந்தியா தகவல் அனுப்பியிருப்பதாகவும் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உதயன்" கிண்ண இறுதியாட்டம் இன்று!

## பருத்தித்துறையில் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 4

''உதயன்'' வெற்றிக்கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ கடற்பிராந்திய இணைப்பாளர் திரு. சூசை இன்றைய நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு தேசியக் கொடி ஏற்றுவதுடன் வைபவம் ஆரம்பமாகும்.

முதல் நிகழ்ச்சியாக ஷப்றா அணிக்கும் வதிரி டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

போட்டியில் மூன்றாம் இடத்தைப்பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் வல்வை டூளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதும்.

இறுதியாட்டம் இன்று மாலை 5 மணிக்கு திருகோணமலை நட்சத்திர விளையாட்டுக் கழக அணிக்கும், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெறும்.

இன்றைய ஆட்டங்களில் வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன.

## அன்னை பூபதி நினைவு நாள் நிகழ்வுகள்

அன்னை பூபதி நான்காவது ஆண்டு நினைவை முன்னிட்டு, இன்று கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் முன்றலில் உண்ணாவிரதமும், நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

★ ★ ★

அன்னை பூபதி நினைவாக ஒட்டுமடம் பொன்னப்பா சாமி கோயிலில் இன்று சிரமதானப் பணிகளும், நாளை உண்ணா நோன்பும் இடம் பெறும்.

★ ★ ★

அன்னையின் நினைவாக இன்றும், நாளையும் நீர்வேலி சிவபண்டிதர் சனசமூக நிலையத்தினர் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

★ ★ ★

யாழ்மாவட்ட கூட்டுறவு சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட அன்னை பூபதியின் ஞாபகார்த்த உண்ணாவிரத நிகழ்வில் மாதலை முருகன் கோவிலில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் சுதுமலை அம்மன் கோவிலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[ஓ-68-5]

## உற்சவங்கள்

குருநகர், ஏப். 4

வண்ணார்பண்ணை மேற்கு நாவலடி பேச்சி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை திருக்குளிர்த்தி வைபவம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேகமும், நண்பகல் 12 மணிக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து மகேசுரப் பூசை ஆகியனவும் இடம் பெறும்,

[ஓ,51]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 4

வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான [நாச்சிமார் கோவில்] மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 16 ஆம் திகதி இரதோற்சவம் நடைபெறும்.

[ஓ]

## குருபூசை

யாழ்ப்பாணம், ஏப், 4

நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை தினம் இன்று (பங்குனி அச்சுவினி நட்சத்திரம்) சனிக்கிழமையாகும்.

சுவாமிகளின் குருபூசை தினத்தை முன்னிட்டு அவர் வசித்த நல்லூர் தெற்கு வீதியில் உள்ள இல்லத்தில் விசேட பூசையும், சடையம்மா மடத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

[அ]

## சாரணர் பயிற்சி

மானிப்பாய், ஏப். 4

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் இளைச் சங்க அணித்தலைவர்களுக்கான பயிற்சிகள் இன்றும் நாளையும் நடைபெற உள்ளன.

மானிப்பாய் உப மாவட்ட பயிற்சிகள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையிலும், வட்டுக்கோட்டை உபமாவட்ட பயிற்சிகள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும், காங்கேசன்துறை உபமாவட்ட பயிற்சிகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் இடம் பெறும்.

---

## மரண அறிவித்தல்கள்

### பரமநாதன் சண்முகலிங்கம்

[இளைப்பாறிய நிதி உதவியாளர், யாழ். கல்வித் திணைக்களம்]

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 70, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான பரமநாதன் சண்முகலிங்கம் 2 - 4 - 92 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தவலட்சுமியின் அன்புக் கணவரும், றோகினி [லண்டன்], தர்சினி [தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்], ஸ்ரீதரன் [ஜேர்மனி], ஸ்ரீசங்கர் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், விஜயகுமாரின் [லண்டன்] அன்பு மாமனாரும், கனகலிங்கம், விஜயலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூபாலசிங்கம் [சேவ்டி டிராவல்ஸ்], சறோஷினி ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை [5-4-92] காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. தர்சினி [மகள்]

70, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

[20351]

### கந்தையா சற்குணசிங்கம்

[அதிபர் நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயம், பதில் கொத்தணி அதிபர். புதுக்குளம்]

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. கந்தையா சற்குணசிங்கம் 02-04-92 இல் காலமானார்.

அன்னார் மட்டுவில் திரு. திருமதி கந்தையாவின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திரிபுரசுந்தரியின் தந்தையும், திருமதிகள் ந. கமலாதேவி, வே இந்திராதேவி, பூ. இலட்சுமிதேவி, க. சுந்தரராஜா [கிராமசேவையாளர், மீசாலை வடக்கு], க. குலதிலகராஜா, க சிவானந்தராஜா ஆகியோரின் சகோதரரும், திருமதி க சிவபாக்கியத்தின் மைத்துனரும், திரு S கணேசனின் [ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், ஒய்லூரியக் கிளை யாழ்ப்பாணம்] சகலனும், க. முகுந்தனின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-04-92 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினருக்கு அறியத் தருகிறோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.
[4612]

தகவல்:
S. கணேசன்
[சகலன்]

---

## ஈழத் தமிழ்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்றும் திரு. அரங்கநாயகம் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

தமிழகக் கல்வி நிலையங்களில் பயிலும் வெளிநாட்டு மாணவர் இந்தியாவுக்கு எதிராக பிரிவினைவாதச் செயல்களில் ஈடுபட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்—

இலங்கை மாணவர்கள் தீவிரவாத பயிற்சி முகாம்களில் சேர்ந்திருந்தது தெரிய வந்ததாலேயே தற்போது அந்த நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் தமிழக கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.—என்றும் திரு. அரங்கநாயகம் மேலும் சொன்னார்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் தமிழகத்தில் ஈழத் தமிழ் மாணவர்களைச் சேர்ப்பதற்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக அகதிகளாக இடம்பெயர்ந்த ஈழத் தமிழ் பெற்றோர்களின் பிள்ளைகளை தமிழக அரச கல்லூரிகளில் சேர்ப்பதற்கு பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த வசதிகளும், சலுகைகளும் இதுவரையிலும் உத்தியோகபூர்வமாக ரத்துச் செய்யப்படாமல் இருந்தன. எனினும் ஜெயலலிதா அரசு பதவிக்கு வந்த பின்னர் ஈழத் தமிழ் மாணவர், மாணவியர்களை அனுமதிப்பதை தமிழகக் கல்லூரிகள் வெகுவாகக் குறைந்து வந்தன. இப்போது உத்தியோகபூர்வமாகவே தடை விதிக்கப்பட்டுவிட்டது!

ஈழத் தமிழர்கள் மீது ஜெயலலிதா அரசு மேற்கொள்ளும் பழிவாங்கல் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றென [illegible] வட்டாரங்கள் கண்டனம் தெரிவித்தன. [அ-எ-10]

---

# திட்ட அதிகாரிகளாக 74 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 4

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் 74 பட்டதாரிகள் திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களாக மாகாண சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்,

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள 180 பட்டதாரிகள் அரச செயலகங்களில் முகாமைத்துவ பட்டதாரிப் பயிலுனர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இரண்டு வருட பயிற்சிக் கால அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களில் முதல் தொகுதியாக 74 பேருக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பயிற்சி பெற்றவர்களில் 27 பேர் அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள கஷ்டப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதிக்கு மட்டும் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்பில் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 4

புத்தாண்டு காலத்தை ஒட்டி கொழும்பு மாநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

குழப்பத்தை ஏற்படுத்தும் தீயசக்திகள் குறித்து விழிப்புடன் செயல்படுமாறு பொலீஸார் பணிக்கப்பட்டுள்ளனர்.

சட்டம் - ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொலீஸாருக்கு ஆயுதப்படையினர் ஒத்துழைப்பு வழங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-எ)

## தீவிரவாதிகள் நடமாட்டமாம்!

# 2 ஆவது காட்சி சினிமாவை ரத்துச் செய்யக் கோரிக்கை

## தமிழக அரசுக்கு சிபாரிசு

சென்னை, ஏப். 4

தமிழகத்தில் குறிப்பாக சென்னை நகரில், இரவு பத்து மணிக்கு நடைபெறும் இரண்டாவது சினிமாப்படக்காட்சிகளை ரத்துச்செய்ய வேண்டும் என்று பொலீஸார் மாநில அரசுக்குச் சிபார்சு செய்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற் கொண்டு இச் சிபார்சை பொலீஸார் மாநில அரசுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

தீவிரவாதிகளின் இரவுநேர நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இது உதவும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் மற்றும் முக்கிய அரசியல் வாதிகளுக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள இந்த நிலையில் இரவு படக்காட்சிகளை நடத்த அனுமதிப்பதால் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படலாம் என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

[உ-எ]

## பலாலி தடுப்பு முகாமில்

# காவலில் உள்ளோரை செஞ்சிலுவை குழு சந்தித்தது

யாழ்ப்பாணம், ஏப். 4

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை கவனிப்பதற்காக அங்கு சென்றிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் நேற்று மாலை யாழ்ப்பாணம் திரும்பினர்.

அவர்கள் அங்கு தடுத்து வைக்கப்பட்டவர்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் அவர்களின் உடல் நிலையையும் பரிசோதனை செய்தனர்

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் அவர்களின் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களையும் செஞ்சிலுவை அதிகாரிகள் எடுத்து வந்துள்ளனர். (உ-3)

# போதை வஸ்து கடத்திய இந்தியப் பிரஜை கைது!

கொழும்பு, ஏப். 4

''கிரைண்டிங்'' இயந்திரம் ஒன்றுக்குள் வைத்து அரைக் கிலோ ஹெரோயினைக் கடத்த முயன்ற இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்காவில் போதைப்பொருள் தடுப்பு பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேற்படி சந்தேக நபரை வரவேற்க விமானநிலையம் வந்திருந்த மற்றொரு நபரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொண்டுவரப்பட்ட ஹெரோயின் 6லெட்சம் ரூபா பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியப் பிரஜை சென்னையிலிருந்து வந்தவரெனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-10]

## சுவர் பூச்சுமை எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 4

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குத் தேவையான சுவர் பூச்சுமை(பெயின்ட்)வகைகள் எடுத்து வர கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதி வழங்கி உள்ளது.

இதேவேளை, மில்க்வைற் நிறுவனத்துக்கு 8 மெற்றிக் தொன் கோஸ்டிக் சோடா எடுத்து வரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

---

## மட்டக்களப்புப்....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கும் விலாசமிடப்பட்ட மகஜர்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் மாணவர்களினால் அனுப்பி வைக்கப்பட்டன.

மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு அவர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்ற அந்த மகஜரில் கோரப்பட்டிருந்தது.

[உ-8]

## மன்னாருக்கு சிவில் நிர்வாக அதிகாரி

கொழும்பு, ஏப். 3

மன்னார் சிவில் நிர்வாக அதிகாரியாக உதவிப் பொலீஸ்அத்தியட்சகர் ஜனாப் எம். எம். ஸியாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ரணதுங்க இந்த நியமனத்தைச் செய்துள்ளார். (ஓ-எ-த)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட் ) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 4 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org